# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 211 ஆங்கீரச ஆனி 11 (25.06 1992) வியாழன


## கண்டனப் பேரணி திங்கள் நடைபெறும்

1990 ஆம் ஆண்டு நடைபெற்ற உயர்தரப்பரீட்சையில் பல்கலைக்கழகத்திற்கு தமிழ் மாணவர்களை அனுமதிப்பதில் அரசு காட்டும் பாரபட்சத்தை கண்டித்து நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டப் பேரணி எதிர்வரும் திங்கள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தில் இந்த பேரணி ஏற்பாடு குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேரணியை எதிர்வரும் திங்கள் நடத்துவது என இறுதியாக முடிவு செய்யப்பட்டது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

# மட்டக்களப்பில் ரோந்து அணி தாக்கப்பட்டது; 6 படையினர் பலி

## மூன்று முகாம்களிலிருந்து உதவிக்கு வந்த படையினர் மீது தாக்கு

**மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 6 படையினர் பலியாகினர். ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.**

மட்டக்களப்பிலுள்ள பளுகாமம் இராணுவ முகாமிலிருந்து சுமார் 75 படையினர் தும்பங்கேணி நோக்கி சென்று கொண்டிருந்தனர். இந்த இராணுவ அணியை சின்ன காந்தி புரம் பகுதியில் வழிமறித்த புலிகள் கடும்தாக்குதலை ஆரம்பித்தனர். தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது படையினருக்கு உதவ பளுகாமம் வெல்லாவெளி, கொக்கட்டிச் சோலை இராணுவ முகாம்க

—04 ஆம் பக்கம் பார்க்க

## கைப்பற்றிய ஆயுதம்

மட்டக்களப்பு சின்ன காந்திபுரத்தில் படையினர் மீது நடைபெற்ற தாக்குதலில் கைப்பற்றிய ஆயுதங்கள்,

- ரி - 56 துப்பாக்கிகள் - 3
- ரவை கூடுகள் - 15
- ரி - 81 துப்பாக்கி - 1
- ரவைக்கூடுகள் - 4
- ஐ எம். ரவைகள் - 500
- ஜே ஆர். குண்டுகள் - 3
- 40 எம். எம் ஷெல்கள் - 6
- சிறிய இனைமோர் - 1
- வெடிக்கவைக்கும் கருவி - 1
- வயர் - 1
- கோல்சர் - 3

## வீரச்சாவு

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெற்றிகரத்தாக்குதலில் மேஜர் பயில்வான் சி. சிவராஜா (கொக்கட்டிச்சோலை) கப்டன் கீர்த்தி (கை. உதயகுமார் களுவாஞ்சிக்குடி) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

## திருநெல்வேலியில் வீடு முற்றுகை மண்ணெண்ணெய் மீட்பு

திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றினுள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டு பரல் மண்ணெண்ணெயை நேற்று பிற்பகல் 4 மணியளவில் தமிழீழ காவல் துறையினர் மீட்டெடுத்தனர்.

மேற்படி வீட்டை திடீரென முற்றுகையிட்டு சோதனை நடத்திய காவல் துறையினர் அங்கு இருந்த இரண்டு பரல் மண்ணெண்ணெயை மீட்டெடுத்துக் கொண்டு சென்றுள்ளனர்.

அத்துடன் இந்த மண்ணெண்ணெய்க்கு சொந்தமான வியாபாரியையும் விசாரணைக்காக காவல் துறையினர் கூட்டிச் சென்றதாக தெரிவிக்கப் படுகிறது (47.06)

## மணலாறு மாவட்டத்தில் புதிய தமிழ்ப் பாடசாலை

மணலாறு மாவட்டக் கொக்குத்தொடுவாய் பிரிவில் மேலும் ஒரு பாடசாலை புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்ட இப்பாடசாலையை முல்லை. உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் திறந்து வைத்தார். முல்லைத் தீவு கரைதுறைப்பற்று உதவி ஆணையாளர் மோகனதாஸ் பாடசாலையின் பெயர்ப்பலகையைத் திறந்து வைத்தார்.

உடுப்புக்குளம் கிராம மக்களின் வேண்டுகோளிற்கிணங்க ஆரம்பிக்கப்பட்டுள்ள இப் பாடசாலையில் ஆரம்ப தினத்தன்றே சுமார் 120 மாணவர்கள் சேர்ந்து கொண்டனர். (52)

## இடம் பெயர்ந்தோர்க்கு மேலும் 2 வார நிவாரணம்

இராணுவ நடவடிக்கையின் போது வலி வடக்கு, சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் இருந்து இடப்பெயர்ந்த மக்களுக்கு மேலதிகமாக இரண்டு வார காலத்துக்கு இலவச உலர் உணவு வழங்கும்படி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நேற்று யாழ் அரச அதிபருக்கு அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

வலி வடக்கு, சண்டிலிப்பாய் போன்ற பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் இவ் அகதிகளுக்கு தொடர்ந்து இலவச உலர் உணவு வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி சென்றவாரம் யாழ் அரச அதிபர் அத்தியாவசிய சேவை

04 ஆம் பக்கம் பார்க்க

## 26 ஆம் திகதி வெள்ளப்பெருக்கு? கொழும்பைக் கலக்கும் ஜோசியம்!

இம் மாதம் 26 ஆம் திகதி மற்றுமொரு வெள்ளப் பெருக்கு ஏற்படுமென ஜோஸியர் ஒருவர் கூறியதாகக் கூறப்படும் வதந்தியொன்று தற்பொழுது தென்பகுதியில் பெரும் பரபரப்புக்குரியதாகக் கருதப்படுகின்றது.

இது குறித்துக் கொழும்பு வானிலை அவதான நிலையத்திடம் நேற்று முன்தினம் வினவப்பட்டபோது எம்மால் நிச்சயமாக எதனையும் கூறமுடியாது' என அவர்கள் கையை விரித்து விட்டனர். இதனால் இந்த வதந்தி தென் பகுதி மக்கள் மத்தியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## போலி கடவுச்சீட்டு தயாரிப்பு டில்லியில் தமிழர் கைது

போலி இந்திய மற்றும் வெளிநாட்டு கடவுச் சீட்டுகளை தயாரித்து வந்த இருவர் டில்லியில் நேற்று கைதாகினர்.

இவர்களில் ஒருவர் இலங்கைத்தமிழர் கந்தசாமி எனவும் மற்றவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து பெருந்தொகையான போலி கடவுச் சீட்டுகள் கைப்பற்றப்பட்டன.

## மகாராஜபுரம் சந்தானம் வீதி விபத்தில் பலி

பிரபல தமிழ்நாடு கர்நாடக சங்கீத மேதையும் யாழ்ப்பாணம் இராமநாதன் இசைக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான மகாராஜபுரம் சந்தானம் (64) நேற்று விபத்து ஒன்றில் பலியானார்.

கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு காரில் வந்து கொண்டிருந்த போது விழுப்புரம் அருகே ட்ராக்டர் ஒன்றுடன் மோதி அந்த இடத்திலேயே பலியானார். இவரது மனைவி படுகாயமடைந்தார்.

தஞ்சவூர் மகாராஜபுரத்தில் 1928 இல் பிறந்த இவர் தனது கர்நாடக இசை வல்லமையினால் தமிழக அரசின் ஆஸ்தான வித்துவானாகவும் விளங்கினார்.

★ ஒருவருட ஆட்சிகுறித்து பி. பி, ஸி. சென்னை நிருபர்

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பியதை தவிர ஜெயலலிதா எதனையுமே சாதித்து விடவில்லை

தமிழ் நாட்டில் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆட்சி அமைந்து கடந்த வாரத்துடன் ஒரு வருடம் பூர்த்தியடைந்துவிட்டது. இந்த ஒருவருட காலத்தில் அவர் பெரிதாக சாதித்தது ஒன்றுமேயில்லை என அவரது ஒருவருட ஆட்சி குறித்து கருத்துத் தெரிவித்த பி.பி.ஸியின் சென்னை நிருபர் சாம் ராஜப்பா சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலாவதாக ஜெயலலிதா தமிழகத்தை தொழில்துறையில் உச்ச நிலை மாநிலமாக்குவதாக உறுதியளித்தார், ஆனால் முடப்பட்டிருந்த பின்னி ஆடை ஆலை, ஸ்ராண்டட் மோட்டார்ஸ் ஆலை ஆகியவற்றை மீண்டும் திறந்து வைத்ததைத் தவிர அவர் தொழில்துறையில் வேறு எதையுமே செய்து

—04 ஆம் பக்கம் பார்க்க

★ எதிர்க்கட்சிகள் கூடி முடிவு

# எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக ஸ்ரீமாவோ!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சியினரின் பொது வேட்பாளராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவே நிறுத்தப்படவுள்ளதாகச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

எதிர்க்கட்சிகள் கூடி இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவை எதிர்த்துப் போட்டியிட எதிர்க்கட்சிகள் வலுவான பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டிய தன் அவசியம் வலியுறுத்தப்பட்டதை யடுத்தே இவ் இணக்கம் எட்டப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதன் மூலம் ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிரான வாக்குகள் பிரிவதைத் தடுக்கக்கூடியதாகவிருக்குமெனவும் எதிரணியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## 114 வயது ஜப்பானிய மூதாட்டி கடந்த வாரம் மரணம்

ஜப்பானின் ஆகக்கூடிய காலம் வாழ்ந்தவரெனக் கருதப்பட்ட வகா ஷிறஹமா என்ற மூதாட்டி தமது நூற்றிப்பதின்நான்காவது வயதில் கடந்த வாரம் காலமானார்.

தென் மேற்கு ஜப்பானிலுள்ள மியகொணோகேரில் வாழ்ந்த இவருக்கு, ஒன்பது பிள்ளைகளும், பதினாறு பேரப்பிள்ளைகளும், இருபத்தியொரு பூட்டப் பிள்ளைகளும், பூட்டப்பிள்ளையின் பிள்ளை ஒருவரும் உள்ளனர்.

தமது நூற்றிப்பதினோராவது வயதில் இவர் ஜப்பானின் ஆகக்கூடிய வயதுக்காரர் எனக் கணிக்கப்பட்டார்.

## மீசாலையிலும் குண்டுவீச்சு!

நேற்று முன்தினம் மாலை 6 மணி போல் மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியில் இரு பொம்மர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தின.

குடியிருப்புக்கள் அதிகமான பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும் குண்டுகள் வெற்றுக் காணிகளுக்குள் வீழ்ந்து வெடித்ததினால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. எனினும் அப்பகுதியிலிருந்த வீடுகள் குண்டுச் சிதறல்களினாலும் அதிர்வுகளினாலும் சிறிய சேதங்களுக்கு உள்ளாகின.

அப்பகுதியால் பயணம் செய்து கொண்டிருந்த பலர் இத்தாக்குதலின் போது தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

## பிரான்ஸில் விவசாயிகள் வீதி மறியல் போராட்டம்

ஐரோப்பிய சமுதாயம் பிரான்ஸ் விவசாயிகளுக்கான சலுகை உதவித் தொகைகளைக் குறைக்க திட்டமிட்டதையடுத்து பிரான்ஸ் விவசாயிகளின் கிராம ஒருங்கிணைப்பு அமைப்பு நேற்று முன்தினம் பாரிஸுக்கு செல்லும் முக்கிய பாதைகள் பதினைந்தில் சாலை மறியல் போராட்டம் நடத்தினர்.

சில இடங்களில் தடைகளை அகற்றப் பொலிஸார் விவசாயிகள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்தனர்.

## வவுனியாவுக்கு 9 இடங்கள்

கடந்த வாரம் மட்டக்களப்பில் நடைபெற்ற வடகிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தினப் போட்டிகளில் வவுனியா மாவட்டம் 9 போட்டிகளில் முதலிடங்களைப் பெற்றுள்ளது.

இப் போட்டியில் யாழ். கிளி, முல்லை, மன்னார் மாவட்டப் பாடசாலைகள் பங்குபற்றவில்லையென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தென்பகுதிச் சந்தையில் ‘டெற்றோல்’ மதுபானம்

தொற்று நீக்கியான டெற்றோலைக் கொண்டு தயாரிக்கப்படும் புதுவகை மதுபானமொன்று தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டெற்றோல் தவிர தடிமன், இருமலுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளைக் கூட சிலர் பயன்படுத்தி புதுப்புது வகையான மதுபானங்களைத் தயாரித்து மதுப்பிரியர்களுக்கு இரகசியமாக விற்பனை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் பாவனையிலிருந்த சட்டவிரோத மதுபானமொன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டபோதே அதனைத் தயாரிக்க சந்தையில் விற்பனைக்குள்ள தொற்று நீக்கியான ‘டெற்றோல்’ பயன்படுத்தப்பட்டுள்ள அதிர்ச்சி விடயம் தெரியவந்தது.

## ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி

சிறிலங்கா ரூபாவின் பெறுமதி முக்கிய சர்வதேச நாணயங்களின் பெறுமதிகளுக்கு எதிராக வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மே மாத இறுதியில் ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி ரூபா 43.98 ஆகவும் பிரிட்டிஷ் ஸ்ரேலிங் பவுண்டின் பெறுமதி எண்பது ரூபாவாகவும் இருந்தது.

ஏற்கெனவே பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

## மெக்சிக்கோவில்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா மெக்சிக்கோவுக்குப் பயணமானார்.

## ஆப்கான் ஆட்சிப் பொறுப்பு அரபு சபையிடம் ஒப்படைப்பு

ஆப்கானில் தலிபான் பல தரப்பு பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஓர் அரசசபையிடம் இன்று ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அரசாங்கத்தை நடத்துவதற்காக இடைக்கால அதிபருக்கு வழங்கப்பட்ட சட்டபூர்வ காலக்கெடு முடிவதற்கு 3 நாள்கள் முன்னதாகவே இவ்வாறு ஆட்சி பரிமாறிக் கொள்ளப்படுகின்றது.

## கலையரசு நூற்றாண்டு போட்டி

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரி, அமரர் கலையரசின் நூற்றாண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு பல போட்டிகளை நடாத்தவுள்ளது.

இப் போட்டிகளின் ஓர் அங்கமாக, எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில், கட்டுரைப் போட்டி பேச்சுப் போட்டி வினாவிடைப் போட்டி ஆகியன இடம்பெறவுள்ளன.

18 7 92 சனிக்கிழமை காலை 8,30 மணிக்கு இறுதி நிகழ்ச்சியாக மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நாடகப் போட்டிகள் நடைபெறும் (16)

## மொனறாகலயில் தமிழர்க்கு வீடு

மொனறாகல- வுத்தளயில் 32 தமிழ்க் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

14 ஆவது ‘கம் உதாவ’ ஜெயந்தியை முன்னிட்டு மொனறாகல மாவட்டத்திலுள்ள வுத்தளயில் முதல் முதலாகத் தமிழ் மக்களின் மாதிரிக் கிராமமொன்று நிறுவப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தில் 32 தமிழர்களுக்கு வீடுகள் வழங்கப்படவுள்ளன. இத் திட்டத்திற்கு 15 இலட்சம் ரூபா செலவிடப்படுகிறது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**என். ஆர், சின்னராஜா அவர்கள்**
(யாழ். இணுவையூர் தவில் மேதை, விவகார வித்துவமணி)

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 24 03-1934 | 06-07-1991 |

திதி: 25. 06, 1992 (வியாழக்கிழமை)

ஐயநின் இசையை, பண்பினை, நீ இங்கு ஆற்றிய சேவையை, இந்த வையகம் மறவா திருப்பது குறித்து மனம் குளிர்கின்றது — வணக்கம்

அமரர் என். ஆர் சின்னராஜா
குடும்பத்தினர்

கந்தசாமி கோவிலடி,
இணுவில்

06059



## சிறுவிளம்பரம்

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர்

06051



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்தல் 1992**

1992 ஆம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

படிவங்கள் வழங்கப்படும் திகதி -
29. 06. 92 நண்பகல் 12. 00 வரை

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும் திகதி-
30. 06. 92 நண்பகல் 12. 00 வரை

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்
22. 06. 1992

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

06057

★ கடந்தவாரம் பலர் தடுத்து வைப்பு

# யாழ்தேவி பயணிகளிடம்

## கோட்டை ரயில் நிலையத்தில் கெடுபிடி!

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் வடபகுதி பிரயாணிகளிடம் புகையிரதப் பகுதி ஊழியர்கள் கெடுபிடி காட்டுவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கடந்த வாரம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் யாழ்தேவி ரயிலில் வடபகுதிக்கு பயணம் செய்ய வந்த பயணிகளைப் பொதிகளுடன் அனுமதிக்க முடியாது என ரயில் நிலைய வாயிலில் கடமையிலிருந்த ரிக்கற் பரிசோதிக்கும் ஊழியர்கள் தடுத்து வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து ரயில் பிரயாணிகள் குறிப்பிட்ட தொகை எடை பொருள்களை தம்முடன் எடுத்துச் செல்ல அனுமதியுண்டு எனவும், இதற்குத் தடையாகவிருக்கும் ஊழியர்கள் குறித்து உடனடியாக ரயில் நிலைய அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வருமாறும் புகையிரதப்பகுதி தெரிவித்துள்ளது.

## சென்னையில் பௌத்த மகாநாடு; புத்தர் சிலையும் திறக்கப்பட்டது!

அகில உலக தமிழ், பௌத்த மாநாடு கடந்த மே 25 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை சென்னையில் நடைபெற்றது. இம் மகாநாட்டில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர்.

இந்திய ஆசிய ஆய்வு நிறுவனம், ஜப்பானிய ஆசிய ஆய்வு நிறுவனம், உப்சலா பல்கலைக் கழகம் (சுவீடன்) என்பன இணைந்து இம் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

இம் மாநாட்டில் பௌத்த தமிழர் பௌத்தத்திற்கு ஆற்றியபங்கு இந்து மதம் எவ்வாறு பௌத்தத்தை உள்வாங்கியுள்ளது என்பன குறித்து விரிவாக ஆராயப் பட்டது.

இம் மகாநாட்டில் கலந்து கொள்வதற்கென உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோல்க்கும் வந்திருந்தார். யாழ் பல்கலைக்கழகத்தின் சார்பில் விரிவுரையாளர் கிருஷ்ணராஜாவும் பேராசிரியர் வேலுப்பிள்ளையும் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இம் மாநாட்டின் முடிவில் சென்னை வி. ஜி. பி. தங்கக் கடற்கரையில் பேசுநிலையில் அமைந்த புத்தரின் சிலை ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 36 அடி அமர்ந்த நிலையில் இந்தியாவிலுள்ள புத்தர் சிலைகளுள் இதுவே பெரியது.

சிலையின் அடியில் 'புத்தம் சரணம் கச்சாமி' என்ற வாசகம் தமிழில் எழுதப்பட்டுள்ளது. (22)

## முரசொலிப் போட்டிகள்

முரசொலி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டக் கரபந்தாட்ட சம்மேளனத்தால் நடத்தப்பட்டு வந்த 'பீச் வொலிபோல்' என்று அழைக்கப்படும் 3 வீரர்கள் பங்குபற்றும் கரபந்தாட்டப் போட்டி, இறுதி ஆட்டத்தை அண்மித்துள்ளது.

இப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நாவலர் மார்க்கட்டு பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற அரை இறுதிப் போட்டிகளில், காங்கேசன்துறை விளையாட்டுக்கழக 'ஏ' பிரிவு அணி பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு அணியையும், அந்தனீஸ் விளையாட்டுக் கழக 'பீ' பிரிவு அணி ஆவரங்கால் விளையாட்டுக் கழக அணியையும் வென்றன.

இறுதி ஆட்டத்தில் பாஷையூர் சென். அந்தனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் காங்கேசன்துறை விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு அணி மோதவுள்ளது. (16)

## கமலாசனி வென்றது

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தொண்டர் சபையினரால் அண்மையில் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான சைவசமய அறிவுப் போட்டியில் மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் வெற்றியீட்டியது.

மூன்று சுற்றுக்களாக நடத்தப்பட்ட மேற்படி போட்டியை திரு. சு. லலீசன் நடத்தி வைத்தார். சிவஸ்ரீ கு. சிதம்பரநாதக் குருக்கள் பங்கு கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கினார்.

## ஜனாதிபதி தேர்தல்

இந்தியாவில் புதிய ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்தலில் திரு. ஜோர்ச் செல்லுக்கு ஆதரவளிப்பதென இந்திய தேசிய முன்னணி முடிவெடுத்துள்ளது.

இதேவேளை காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை ஆதரிப்பதென சி. பி. ஐ. எம். முடிவு செய்துள்ளது.

## மெரினாள், குமண பருத்தித்துறைக்கு வரும்?

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு மெரினாள் என்ற சிறிய கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்திருப்பதாக யாழ்செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இக்கப்பலில் இருந்து உணவுப் பொருள்களை உடனடியாக இறக்கப்பட மாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களுடன் இக்கப்பலை பருத்தித்துறை துறைமுகத்துக்குகொண்டுவருவதற்கான நடவடிக்கைகைதற்சமயம்மேற் கொள்ளப்பட்டிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து தற்போது கொழும்பு சென்றிருக்கும் குமண கப்பல் மீண்டும் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு அடுத்த மாதம் 7 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வந்தடையும். 47

## சி. ஐ. டி. பாணி கொள்ளை கொழும்பில் தொடர்கிறது.

கொழும்பில் இரகசியப் பொலிஸார் என அறிமுகப்படுத்திக் கொண்டு வடபகுதித் தமிழர்களிடம் பணம் அபகரிக்கும் சம்பவங்கள் தொடர்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜம்பட்டாத் தெருவில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த சில வடபகுதித் தமிழர்களிடமும் இந்தப்பாணியில் பணம் பறிக்க முயற்சியெடுக்கப்பட்டதாகவும், அந்த போலி சி ஐ டியினர் பின்னர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## சமையல் எரிவாயுவுக்கு கொழும்பில் பலத்த தட்டுப்பாடு

கொழும்பில் கடந்த சில தினங்களாக சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் சமையலுக்கு எரிவாயுவை பயன்படுத்தி வரும் குடும்பங்கள் பாதிக்கப் பட்டுள்ளன.

இத்தட்டுப்பாட்டைப் போக்க வெளிநாட்டிலிருந்து எரிவாயுவை உடனடியாகத் தருவிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் எரிவாயு பிரிவு இம்மாத ஆரம்பத்தில் மறுசீரமைப்பு வேலைகளுக்காக மூடப்பட்டமையே இத்தட்டுப்பாட்டுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

## இந்திய மீனவர்கள் தொல்லை கொடுப்பதாகப் புகார்

பேசாலைக் கடலில் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களுக்குத் தொல்லை கொடுப்பதாக மன்னார் அரசாங்க அதிபரிடம் புகார் செய்யப் பட்டுள்ளது.

இலங்கைக் கடல் எல்லைக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களின் மீன்பிடி வலைகளை சேதமாக்குவதாகவும், திருடுவதாகவும் இப் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் அரசாங்க அதிபர் இவ்விவகாரத்தை கொழும்பின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இரு நபர்களையும் விசாரிக்க ஐ. நாவுக்கு லிபியா அனுமதி!

1988 ஆம் ஆண்டு நடுவானில் விமானமொன்று குண்டு வெடித்து பயணிகளுடன் சிதறிய சம்பவத்தில் சம்பந்தப் பட்டதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ள இரு லிபிய நாட்டவர்களையும் அரபுலீக் அல்லது ஐக்கிய நாடுகள்சபை விசாரிப்பதற்கு லிபிய பாராளுமன்றம் அனுமதியளித்துள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள இருவரையும் தாம் விசாரிக்க வேண்டுமென அமெரிக்காவும், பிரிட்டனும் கோரி வருகின்றன.

இக் கோரிக்கைக்கு லிபியா இணங்க மறுத்ததையடுத்து லிபியா மீது ஐ. நா. தடைகள் அமுல் செய்யப் பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத் தக்கது

## இந்திய வம்சாவளியினர் இந் நாட்டுப் பிரஜைகளே

— அமைச்சர் தொண்டமான்

நாடற்றவர் பிரச்சினை தீர்ந்து விட்டது. இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களைப் பொறுத்தவரை தற்பொழுது எவரும் பிரஜா உரிமை அற்ற நிலையில்லை. அவர்கள் அனைவரும் இந்த நாட்டுப் பிரஜைகளே என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மலையக மக்கள் தம்மை வாக்காளர்களாகப் பதிந்து கொள்ள கிராம சேவையாளர்களிடம் பிரஜா உரிமைச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தென்னாபிரிக்க அரசுடன் பேச்சு ஏ.என்.சி. நிறுத்தியது

தென்னாபிரிக்காவின் டி, கிளார்க் அரசுடன் நாட்டின் எதிர்காலம் குறித்து நடத்தும் பேச்சு வார்த்தையை முறித்துக்கொள்வதென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ. என், சி) தீர்மானித்துள்ளது

ஜொகனஸ்பேர்க் நகருக்கு வெளியே போய் பற்றோங் பகுதியில் நடைபெற்ற நாற்பத்தியிரண்டு பேரின் படுகொலைகளைத் தொடர்ந்து கூட்டப்பட்ட அவசர கூட்டமொன்றிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

நாற்பது பேரின் கொலை தொடர்பாக நூற்றி ஐம்பது பேரைத் தாம் விசாரணைக் குட்படுத்தியுள்ளதாக ஜொகனஸ்பேர்க் பொலிஸார் தெரிவித்தனர்.

## மனையியல், விவசாய ஆசிரியர் பதவிகள்

மனையியல் மற்றும் விவசாய விஞ்ஞான ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்பக் கல்லூரியொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மனையியல் டிப்ளோமா பெற்றவர்களும், குண்டசாலை அரசினர் விவசாயக் கல்லூரியின் விவசாய விஞ்ஞானம் தொடர்பான டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு விவசாய பாடசாலையொன்றில் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது அம்பாறை ஹடி. இன்ஸ்டிடியூட் நிறுவனங்களில் விவசாய விஞ்ஞானத்தில் டிப்ளோமாச் சான்றிதழ் பெற்றவர்களும் இப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

மாவட்ட அடிப்படையில் மாகாண சபையின் கீழான இந் நியமனங்களுக்குரிய விண்ணப்பங்கள் இம் மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

அனுராதபுரம், நுவரெலியா, புத்தளம், மொனறாகலை, மாத்தளை, திருகோணமலை, பொலநறுவை, அம்பாறை, அம்பாந்தோட்டை, பதுளை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கே இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

18- 35 வயதுக்குட்பட்டோர் விண்ணப்பிக்கமுடியும். தெரிவு தொழில்சார் பரீட்சையின் அடிப்படையில் இடம் பெறும். இது குறித்து பூரண விபரம் 05 06, 92 வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், மாதிரி விண்ணப்ப படிவத்தினையும் 'முரசொலி' அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடமுடியும்.

## பலமற்ற குடிசைகளில் இடம்பெயர்ந்தோர் அவலம்

சங்கானை, மருதங்கேணிப் பகுதிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் அமைக்கப்பட்டுள்ள குடிசைகள் மக்கள் வாழக்கூடிய நிலையில் இல்லாமையால் அடுத்த பருவ மழை காலத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மிகவும் பெரியதோர் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.

மிகச் சிறியவைவான இக்குடிசைகள் ஒப்பந்த அடிப்படையில் அமைக்கப்பட்டமையால் ஆரம்பத்திலேயே தகுதியற்ற குடிசைகளாக அமைந்துள்ளன இப்படியான குடிசைகள் அமைத்து ஒரு வருடத்துக்கு மேலாகி விட்டதால் கூரை பருவ மழையைத் தாங்கக் கூடியதாக இல்லை.

குடிசைகள் அமைக்கப் பயன்படுத்தப்பட்ட மரங்கள் பெரும்பாலும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் கிடுகு, மரம் ஆகியவை உடனடியாக வழங்கினால் மட்டுமே இம்மக்கள் தொடர்ந்தும் இக்குடிசைகளில் வாழக்கூடிய சூழ்நிலை உள்ளது.

யாழ் குடாநாட்டில் தொடர்ந்தும் மக்கள் இடம் பெயரப் போகிறார்கள். இந் நேரங்களில் குடிசைகள் அமைக்க வேண்டி ஏற்படும் போது தனியாரிடம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கி தரமற்ற குடிசைகளை அமைப்பதை விட்டு இடம்பெயர்ந்த மக்கள் தாமாகவே குடிசைகள் அமைத்துக் கொள்ள வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதையே இம்மக்கள் விரும்புகிறார்கள்.

## ஸ்வெல் சார்பில் எதிர்க்கட்சிகள் வேட்புமனு

இந்திய ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள பேராசிரியர் சுவெல் சார்பில் நேற்று தேசிய முன்னணி கட்சியும் பாரதிய ஜனதா கட்சியும் ஜனதாதள்ளும் தனித்தனியாக வேட்பு மனு தாக்கல் செய்தன.

காங்கிரஸ் சார்பில் சங்கர் தயாள் சர்மா நிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.

அடுத்த மாதம் பதின்மூன்றாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலின் வேட்புமனு தாக்கல் செய்வதற்கு நேற்றுத் தான் கடைசி நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷெடுயூல்ட் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த பேராசிரியர் சுவெல் 1969 முதல் 1977 வரை இந்திய பாராளுமன்றில் துணை சபாநாயகராக இருந்தவர் நோர்வே, ஐஸ்லாந்து நாடுகளில் இந்திய தூதுவராக பணிபுரிந்தவர்.

இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட 31 வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளனர் இவர்களுக்கென 53 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## மேலும் பதினேழு பேருக்கு இன்று எழுவினைஞர் நியமனம்

அமைய எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் மேலும் 17 பேருக்கு இன்று நியமனக்கடிதங்கள் வழங்கப்படும் என யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களில் 11 பேர் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் 6 பேர் தேசிய சேமிப்பு வங்கிக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய அரச திணைக்களம் வங்கிகள் என்பனவற்றிற்கும் எழுதுவினைஞர்களை நியமிப்பதற்கு யாழ் செயலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (47)

● காவல்துறை பொறுப்பாளர்

# பொருள்களைப் பதுக்கல் குற்றமாகக் கருதப்படும்

தற்போதைய போர்க்கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்து கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் பொதுமக்களின் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றான மண்ணெண்ணெயினைப் பதுக்கும் நடவடிக்கைகளில் சில வர்த்தகர்கள் மீண்டும் ஈடுபட்டுள்ளனர்.

விடுதலைக்காகப் போராடும் மக்கள் மீது இவ்வாறான தேவையற்ற துன்பத்தையும் துயரத்தையும் திணிக்க முயல்வது மன்னிக்க முடியாத குற்றமாகும். இதை ஓர் சமூக விரோதச் செயலாகவே கருதுகின்றோம். இது போதுமான மண்ணெண்ணெய் கையிருப்பில் உள்ளது என தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் எச்சரித்துள்ளார்.

பொதுமக்களின் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குவோர் மீதும், கூடிய விலையில் விற்போர் மீதும் அபராதம் விதிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட காலத்திற்கு தடுத்தும் வைக்கப்படுவர். இவ்வாறு மக்களின் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குவோர், கூடிய விலையில் விற்போர் பற்றிய தகவல்களை அண்மையில் உள்ள காவல் பணிமனைக்கு உடனுக்குடன் தெரிவிக்குமாறு சகல பொதுமக்களையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இன்று பொதுமக்கள் கொடுத்த தகவலை வைத்து கூடிய விலையில் விற்றார்கள் எனும் சந்தேகத்தின்பேரில் ஒருசில மண்ணெண்ணெய் வர்த்தகர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

● ஒலிம்பிக் போட்டிகள்

## தெ. ஆபிரிக்கா கலந்துகொள்வதை தடை செய்ய கோரிக்கை

பார்சலோனாவில் நடைபெறவுள்ள 1992 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் தென்னாபிரிக்கா கலந்துகொள்வது தடை செய்யப்படவேண்டுமென ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் நெல்சன் மண்டேலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒலிம்பிக் போட்டிகளில் தென்னாபிரிக்கா கலந்து கொள்வதை ஆதரிக்க ஏ.என்.சி. கடந்தவாரம் நடந்த நாற்பத்திரண்டு பேரின் படுகொலையையடுத்து இவ்வேண்டுகோளை விடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் வன்செயல்கள் பற்றி உலக அவதானத்தை ஈர்க்கவே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# முஸ்லிம்களின் தாயகமும் தமிழீழம் மட்டுமே

தமிழர்களை அழிப்பதன் மூலம் தங்களது சுதந்திரம் பாதுகாக்கப்படும் என முஸ்லிம்கள் கருதுகின்றனர் போல் உள்ளது இதன் மூலம் தமக்கு பாதுகாப்பு கிடைக்கும் எனவும் நம்புகின்றனர் போலும் இங்கே புலிகள் கூறவிருப்பது நண்பன் யார்? எதிரியார்? என்பதைத்தான்

இவ்வாறு விடுதலைப்புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது முஸ்லிம்களை பொறுத்தவரையில் அவர்களின் அரசியல் எதிர்காலமும், சுபிட்சமும் தமிழீழத்தில்தான் இருக்கிறது தமிழீழம்தான் முஸ்லிம்களின் தாயகமுமாகும்

தமிழ்த் தேசிய இனத்தின் ஓர் அங்கமான முஸ்லிம்கள் தமிழர்களின் விரோதிகள் அல்லர் இவர்கள் தமிழருடன் இணைந்து வாழ வேண்டியவர்கள்

முஸ்லிம்களின் உண்மையான விரோதிகள் சிங்கள பேரினவாதமும் இந்திய ஏகாதிபத்தியமுமே. இதை உணர்ந்து முஸ்லிம்கள் தமது தமிழர் விரோத உணர்வை கைவிட வேண்டும் தமிழருடன் இணைந்து வாழ்வதில்தான் முஸ்லிம்களின் எதிர்காலமே தங்கியுள்ளது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

★ கம் உதாவவில் ஜனாதிபதி

## துரோகிகளிடமிருந்து நாட்டைப்பாதுகாக்கவேணும்

"துரோகிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்போம். தியாகிகளின் வழித்தோன்றல்கள் இன்றும் எம்மத்தியிலுள்ளனர்" என புத்தள கிராம எழுச்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்துள்ளார்

"நாட்டின் சுதந்திரத்திற்காக தம் உயிரைத் தியாகம் செய்தவர்களை நாட்டு மக்கள் ஞாபகப்படுத்திக்கொள்கின்றனர் இவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் எம் மத்தியில் உள்ளனர்" என்றும் அவர் கூறினார்.

"காலனித்துவ எஜமான் அடிவருடிகளாகச் செயற்பட்ட உள்ளூர்த் துரோகிகளை மக்கள் வெறுக்கின்றனர். எமது நாட்டுக்கு மீண்டும் துரோகம் செய்ய வெளிநாட்டுச் சக்திகளின் கூலிக்காரர்களாக மாறியுள்ள அத்துரோகிகளைப் பின்பற்றி நடப்பவர்கள் இன்னமும் எங்கள் மத்தியில் உள்ளனர். அத்துரோகிகளிடமிருந்து நாட்டைப்பாதுகாப்பதும் மக்களின் சுபிட்சமான வாழ்வுக்காக உழைப்பதும் எங்கள் அனைவரினதும் கடமையாகும்" என்றும் ஜனாதிபதி அங்கு மேலும் கூறினார்.

## அனுதாபக் கூட்டம்

### நவரத்தினம் சரவணபவானந்தன்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சட்டவைத்தியத்துறைப் பேராசிரியர் நவரத்தினம் சரவணபவானந்தன் அவர்கள் 24 06 1992 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 28 06. 1992 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லமான இல 1161 கோட்டைறோட், ராஜகிரியா. கொழும்பில் நடைபெறும். அன்னாரது மறைவையொட்டிய அனுதாபக் கூட்டம் ஒன்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெள்ளிக்கிழமை 26 06. 1992 மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

தகவல்

சிரேட்ட உதவிப் பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.

06060

26 ஆம்...

பெருங்கிலியைத் தற்போது ஏற்படுத்தியுள்ளது

இதே வேளை கொழும்பு வானிலை அவதான நிலையம் நேற்று நண்பகல் வெளியிட்ட அறிக்கையொன்றில் நாட்டில் நிலவும் ஊங்களின் படி இலங்கையில் சூறாவளியோ, மற்றுமொரு வெள்ளப்பெருக்கோ ஏற்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இப்போதைக்கு இல்லையெனவும் சூறாவளியேற்படும் நிலை ஏற்பட்டால் அது பற்றிப் பொதுமக்களுக்கு முன்னரேயே அறிவிக்கப்படுமெனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

"இம் மாதம் 26 ஆம் திகதி நாட்டுக்கு மோசமான நாளா?" என இது குறித்துப் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில்...

ளிலிருந்து மேலதிக படையினர் கவச வாகனங்கள் சகிதம் விரைந்து வந்தனர்.

உதவிக்கு வந்த இந்தப் படையினரை எதிர்கொண்ட புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதலை ஆரம்பித்தது.

இம் மோதல்களில் 6 படையினர் பலியாக ஏனையோர் தப்பியோடினர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த வாரம் முதல் மீண்டும் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டிய பி.பி.ஸி. இது படைத்தளபதிக்கு கவலையை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தது.

## போராட்டங்கள் நடத்த சென்னையில் தடை

சென்னையில் இன்று முதல் இரு வாரங்களுக்கு ஊர்வலம் மறியல், உண்ணாவிரதப் போராட்டம் என்பவற்றை நடத்த சென்னை பொலிஸார் தடைவிதித்துள்ளனர்

இத்தடைக்கான காரணம் ஏதும் இதுவரை தெரிவிக்கப் படவில்லை

## இஸ்ரேல் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி வெற்றி

இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி வெற்றி பெற்றுள்ளது. தொழிற்கட்சியும் அதன் இடதுசாரி கூட்டணி கட்சிகளுமாக இஸ்ரேல் பாராளுமன்றத்தின் 120 ஆசனங்களில் 62 இடங்களை கைப் பற்றியுள்ளன.

பிரதமர் இட்சாக் ஷாமீரின் லிக்குட் கட்சியும் அதன் வலது சாரி கட்சிகளும் இணைந்து 58 இடங்களை கைப்பற்றியுள்ளன.

அதேவேளை தொழிற்கட்சி தனித்து 45 ஆசனங்களையும் லிக்குட்கட்சி தனித்து 32 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

தேர்தலில் இடப்பட்ட பொதுமக்கள் வாக்குகள் எண்ணப்பட்டுவிட்டன எனினும் இஸ்ரேல் இராணுவத்தினரின் வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.

வெற்றி பெற்றுள்ள தொழிற்கட்சியின் தலைவர் ரபின் அடுத்த மாதம் 13 ஆம் திகதி தனது அரசை அமைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

1969 இற்குப் பின்னர் பிரதமர் ஷாமீரின் ஆளும் லிக்குட் கட்சிக்கு இடைநடந்த தேர்தலில் படுதோல்வி இது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை...

விடவில்லை.

இரண்டாவதாக இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழீழ விடுதலைப் புலிகளை மத்திய அரசுடன் இணைந்து தடைசெய்ததுடன் கொந்தளிப்பான நிலையில் உள்ள இலங்கைக்கு முடிந்தவரையில் அகதிகளாக வந்தவர்களைத் திருப்பி அனுப்பினார். இதுவே அவர் இந்தப் பிரச்சினையில் இதுவரை கண்ட சாதனை.

மூன்றாவதாக தேர்தல் வாக்குறுதியில் கச்சதீவை மீளவும் பெற்றுத்தருவதாக தமிழக மீனவர்களுக்கு உறுதியளித்தார். ஆனால் அதுவும் மீனவர்கள் கரையோரங்களில் இறால் வளர்ப்பை மேற்கொண்டு வாழ்க்கை நடத்தலாம் எனக் கூறப்பட்டு கச்சதீவு விடயத்தையும் கைவிட்டார்.

நான்காவதாக மதுவிலக்கை தீவிரமாக கடைப்பிடிப்பதாக அறிவித்தார். ஆனால் இம் மாதம் முதல் சுமார் ஐயாயிரம் மதுக்கடைகள் அரசின் அங்கீகாரத்துடன் திறக்கப்பட்டு மாநிலம் சாராய வெள்ளத்தில் உள்ளது என பி.பி.ஸியின் சென்னை செய்தியாளர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்.

## பொதுக்கூட்டம்

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிறு காலை 9 மணிக்கு கைதடி நவீனப் பாடசாலையில் நடைபெற உள்ளது

இடம் –

கள் ஆணையாளரை கோரியிருந்தது தெரிந்ததே

இதனை விட மாதகல் இளவாலை பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கும் இந் நிவாரணம் கிடைக்கும் என அவ் வட்டாரம் மேலும் தெரிவித்தது. 47

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிறறெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 25-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது